Koviloor Digital Library

திருநெல்லை

ஆன்மீகத் திங்களிதழ்

சோபகிருது - ஆவணி
2023 - செப்டம்பர்

இணைய வழி
மலர்-1 - இதழ்-1

அருள்மிகு சிவகாம சுந்தரி அம்பாள் உடனுறை தென்சபாநாயகர்

கோவிலூர்

Koviloor Digital Library



கோவிலூர் ஆதீனத்தின்
பல் துறை வளர்ச்சிகளிலும் பங்கேற்று
பல கல்வி நிறுவனங்களை நிறுவி
வேதாந்தத் தொண்டாற்றிய
திருநெல்லை இதழின் சிறப்பு ஆசிரியராக விளங்கிய
கோவிலூர் பதிமூன்றாம் பட்டம்
சீர் வளர் சீர் **மெய்யப்ப ஞான தேசிக சுவாமிகள்** அவர்களுக்கு
திருநெல்லையின்
இணைய இதழைக் காணிக்கையாக்குகிறோம்.

Koviloor Digital Library

திருநெல்லை

இணைய வழி ஆன்மீகத் திங்களிதழ்

சோபகிருது ஆவணி

2023–செப்டம்பர்

இணையவழி இதழ் 1

(தனிச் சுற்றுக்கு மட்டும்)

சிறப்பாசிரியர்

பொற்கிழிக் கவிஞர்

சொ.சொ.மீ. சுந்தரம்

ஆலோசகர்

தமிழாகரர் தெ. முருகசாமி

ஆசிரியர் குழு

வெளியிடுபவர்

சீர் வளர் சீர்

நாராயண ஞான தேசிக சுவாமிகள்

கோவிலூர் மடாலயம்

கோவிலூர் 630 307

மானகிரி (அஞ்சல்)

(வழி) காரைக்குடி

சிவகங்கை மாவட்டம்

04565–236846

94433 37011

இணைய அச்சாக்கம்

திரு. கணேஷ்

ஸ்ரீபெரும்புதூர்

பொருளடக்கம்

1. ஆசியுரை........................ 4
2. நாச்சியப்ப சுவாமிகளின் குருபூஜை...................... 7
3. கோவிலூர்–கோயிலூர்.... 8
4. ஆண்டவர் திவ்ய வரலாறு................ 11
5. ஆண்டவரின் சுவானுபவத் திருவாக்கு 14
6. கோவிலூர் தென்சபாநாயகர் திருக்கோயில் 17
7. தென்சபாநாயகர் கோயில் கும்பாபிஷேக காட்சிகள்.... 19
8. கோவிலூர் சுவாமிகள் கலந்து கொண்ட நிகழ்ச்சிகள்........ 34
9. தேவாரம் பாடி பரவுவோம்..... 37

Koviloor Digital Library

ஆசியுரை

சீர் வளர் சீர்
நாராயண ஞான தேசிக சுவாமிகள்
கோவிலூர் ஆதினகர்த்தர்

குபேரன் சிவபெருமானுடன் பூலோகத்தை சுற்றி வந்த போது பூம்புகார் நகரின் அழகில் மயங்கியதாகவும், அங்கு சில காலம் வாழ விரும்பியதாகவும் சிவபெருமான் அவரை மானிடனாக பூம்புகாரில் அவதாரம் செய்ய வைத்ததாகவும் வரலாறு. அவர் அதற்கு தேர்ந்தெடுத்தது ஒரு நகரத்தார் இல்லத்தை.

அவருக்கு 35 வயது ஆகியும் மகப்பேறு இல்லாமையால் திருவிடைமருதூரில் வழிபாடு செய்தார். இதே நேரத்தில் அவ்வூரில் வாழ்ந்த சிவசருமர் என்ற ஓர் ஏழை அந்தணர் கனவில் சிவபெருமான் தோன்றி அருகில் உள்ள மரத்தடியில் காலையில் ஓர் குழந்தை இருக்கும். அதைக் கொண்டு சென்று பட்டினத்தாரிடம் அளித்து, அக்குழந்தையின் எடைக்கு எடை பொன் பெற்று நல்வாழ்வு வாழ வாழ்த்தினார்.

அவரும் அவ்வாறே மரத்தடியில் இருந்த ஆண் குழந்தையைப் பட்டினத்தாரிடம் கொடுத்து பொன் பெற்றுச் சென்றார்.அக்குழந்தை மருதவாணர் என்ற பெயரில் வளர்ந்து 16 வயதில் குலத்தொழில் செய்வதற்காக கடல் கடந்து வாணிகத்திற்குச் சென்றார்.

அவர் வணிகம் முடித்து ஊர் திரும்பியதும் பட்டினத்தார் அவர் ஈட்டிய பொருளைக் காண

Koviloor Digital Library

கப்பலுக்குச் சென்று பார்த்தார். கப்பல் முழுவதும் செல்வத்திற்குப் பதிலாக வரட்டிகளாக அடுக்கப் பட்டிருந்தன. இதனால் அவர் மிகவும் கோபமுற்று, ஒரு வரட்டியை எடுத்து உடைத்தார். அதிலிருந்து விலை உயர்ந்த ரத்தினங்கள் சிதறின. உடனே மிக்க மகிழ்வுடன் வீட்டிற்கு சென்று மகனை பாராட்ட விழைகிறார். ஆனால் அவரின் மகனாரோ ஓர் காதறுந்த ஊசியுடன், “காதறுந்த ஊசியும் வாராது காண் கடைவழிக்கே”, என்று எழுதிய ஓலையைத் தன் தாயாரிடம் கொடுத்து விட்டுச் சென்று விட்டார்.

செல்வம் நிலையில்லாதது என்பதை உணர்ந்த பட்டினத்தார் அக்கணமே துறவியானார். இதில் நாம் உணர வேண்டியது

1.குபேரன் உலகின் முதல் நிதி நிர்வாகி மற்றும் அறங்காவலர். சிவபெருமானின் செல்வத்திற்கு அவரே அறங்காவலர்.

2. அவர் எங்கு வேண்டுமானாலும் அவதரித்திருக் கலாம். ஆனால் ஓர் நகரத்தார் இல்லத்தில் அவதரித்தார்.

3. அவருக்குச் சிவ பெருமான் மகனாக அவதரிக்கிறார்.

குபேரனின் வழிவந்த நகரத்தார், மரபியல் கூறின் (DNA) படி பார்க்கும் போது ஈட்டலிலும் அறம் செய்வதிலும் கோவில் நிர்வாகத் திலும் சிறந்து விளங்கியதில் வியப்பில்லை. சிவபெருமானே நகரத்தாரின் தாயான காரைக்கால் அம்மையாரை ‘தாயே’, என்று அழைத்துள்ளது நாம் நினைவு கூர வேண்டிய ஒன்று.இவ்வாறு சிவபெருமானே நகரத்தாரை அன்னையும் பிதாவுமாக பாவித்திருக்கும் நிலை பிற எல்லாவற்றையும் விட நகரத் தாருக்கு மகுடம் சூட்டிய நிலை.

மகுட தன வைசியராக விளங்கிய நகரத்தார்தம் பெருமை தற்போது தேய்வடைகிறதோ என்ற வருத்தம் எழுகிறது. இத்தேய்விற்குக் காரணம் நம்மில் ஒற்றுமை இன்மை நிலவுவதே. இதனைக் காண்கையில் “நம்மில் ஒற்றுமை

Koviloor Digital Library

நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே" என்ற பாரதியாரின் கவிவாக்குதான் நினைவுக்கு வருகிறது.

நகரத்தார்களின் பெருமை தேய்வடைய இரண்டாவது காரணம் நம்மில் அறச் சிந்தனை குறைந்து கொண்டிருப்பது.

நம் திருமடம் நகரத்தாருக்குத் தக்க வழிகாட்டி மீண்டும் முந்தய உயர்வான நிலைக்கு கொண்டு செல்வதை தன் கடமையாக எண்ணுகிறது. ஆகவே நாம் இப்போதிலிருந்து பின்வரும் உறுதிகளை எடுத்துக்கொண்டால் மிகவும் நன்மை பயக்கும்

1. குறைந்த பட்சம் கோவில் நிர்வாகத்தில் ஒன்றுபட்டிருக்க வேண்டும்
2. இயன்ற வரை அறம் செய்ய வேண்டும்
3. சிவத்தொண்டினை நம் குழந்தைகள் மனதில் பதியச் செய்ய வேண்டும்
4. அதற்கு நம் இல்லங்களில் தினம் ஒரு திருப்பதிகம் படிக்க வேண்டும்

இச்செயல்முறைகள் நகரத்தார் இனத்தினை முந்தைய கால பெருமையை அடையச் செய்யும் என்பதில் ஐயமில்லை. இதனை நமது நகரத்தார்கள் கருத்தில் கொண்டு செயல்பட்டு உயர்வடைய திருவருள் கூட்டுவிக்கும்.

நம் கோவிலூர் மடத்தின் செய்தி, இலக்கிய, ஆன்மீக இதழாக நம் 13வது பட்டம் மெய்யப்ப சுவாமிகளால் துவங்கப்பட்ட "திருநெல்லை", மாத இதழாக மீண்டும் மலர்கிறது.

புதிய ஆசிரியர் குழு சிறப்பு ஆசிரியரான திரு சொ சொ மீ அவர்கள் தலைமையில் இளைய சமுதாயத்தை சார்ந்த திரு பிஎல். கைலாஷ், திரு ராம.ஏகப்பன் ஆகியோரை கொண்டிருக்கும். பேரா தெ. முருகசாமி அவர்கள் ஆலோசகராக இருப்பார்கள்.

இந்த இதழ் முழுமையாக மின்னணு இதழாக இருக்கும்.இந்த இதழ் வேண்டுபவர்கள் 9443337011 என்ற தொலைபேசி எண்ணிற்கு புலனத் தொடர்பினைச் (WhatsApp) செய்தால் அவர்கள் இந்த குழுவில் இணைக்கப்படுவார்கள்.

Koviloor Digital Library

நம் திருமடத்தின் பன்னிரண்டாம் பட்டம் சீர் வளர் சீர் நாச்சியப்ப ஞான தேசிக சுவாமிகளின் குருபூஜை

நம் திருமடத்தின் பன்னிரண்டாம் பட்டம் சீர் வளர் சீர் நாச்சியப்ப ஞான தேசிக சுவாமிகளின் குருபூஜை 23.09.2023 அன்று நடைபெற உள்ளது. அன்று காலை முதல் கைவல்ய நவநீதம் முற்றோதல் மற்றும் தேவார இன்னிசையும் நடைபெறும். அன்று நம் திருநெல்லை இதழும் வெளியிடப் பெறும்.

இந்த குருபூஜையை முன்னிட்டு 22.09.2023 அன்று திருவாசகம் முற்றோதல்,மற்றும் முன்னதாக நடத்தப்பெற்ற பள்ளி கல்லூரி மாணவ மாணவிகளுக்கான போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட உள்ளன.

சீர் வளர் சீர் நாச்சியப்ப சுவாமிகளின் குருவருள் பெற்றுய்ய அன்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

Koviloor Digital Library

கோவிலூர் – கோயிலூர்

தமிழாகரர் **தெ. முருகசாமி**
(மேனாள் முதல்வர்,
இராமசாமி தமிழ்க் கல்லூரி, காரைக்குடி)

உலக வழக்கில் ஆலயத்தைக் கோயில் என்றும் கோவில் என்றும் வழங்குவர். கோ + இல் என்ற சொற்கூட்டின் படிக் கோவில் என்பதே சரியாயினும் பொருள் மாறுபாடில்லா வகையில் கோயில் என்பதும் ஏற்கப்பட்டது.

எனினும் இப்பொது நிலை கடந்த சிறப்பில் அச்சொற்கள் தனித்தனிச் சரித்திரக் குறிப்பில் வெவ்வேறு ஊர்களாக உள்ளதைச் சிந்தனைக்கு விருந்தாகக் கொள்ளலாம்.

இக்கோவில், கோயில் என்ற சொற்களுடன் திரு என்ற அடை சேர்த்துத் திருக்கோவில், திருக்கோயில் என்றாலும் பொருள் மாறுபடாவாயினும் இத்திரு சேர்க்காத நிலையில் அவைகள் தனித்தனி ஊர்களாகப் பரிணமிக்கும்வழி இருமையில் ஒருமையாய்க் காணும் புதுமையே சிந்தனைக்கு விருந்தாம் எனலாம்.

கோவிலூர் என்பது திருமகள் நலங்கொழிக்கும் செட்டிநாட்டுச்

Koviloor Digital Library

சீமையில் திருநெல்லை உடனுறை கொற்றவாளீசர் கோயில் கொண்டுள்ள ஓர் ஊராகும்.

தமிழகத்து ஆதீன வரிசையில் கோவிலூரும் ஒன்றாகும். வேதாந்தக் கல்வியை வளர்க்கும் வித்தகத்தில் காரைக்குடி நகரத்தார் மரபில் 1791ஆம் ஆண்டில் அவதாரம் செய்தருளிய முத்துராமலிங்க ஆண்டவரால் 1818ஆம் ஆண்டில் கோவிலூர் திருமடம் உருவானது.

அவர்கள் தொட்டு, நகரத்தார் பாரம்பரிய பரிபாலனத்திற்கு உட்பட்ட வகையில் பல்வேறு வளர்ச்சிகளோடு மடாலயத்தின் பதினோராம் பட்டம் காசி விசுவநாத சுவாமிகள் அருளாட்சிக்குப் பின்னர் பன்னிரண்டாம் பட்டமாகப் பீடாரோகணம் ஏறி 1995ல் அருட் செங்கோல் ஏந்திய தவத்திரு நாச்சியப்ப ஞான தேசிக சுவாமிகளால் கோவிலூர் குவலயம் போற்றும் கோவிலூராக மாற்றமும் ஏற்றமும் பெற்றது.

இராமன் கங்கையில் கால் பதித்தான். கங்கை புதுப்பொலிவுடன் புனிதப் பட்டதாகக் கூறுவர். ஆம்! நாச்சியப்பர் கோவிலூரில் கால்பதித்ததும் திட்டங்கள் பல்வேறாகக் கிளைத்தன. வழக்கமான சமயக் கல்வியோடு, ‘பயிற்றுப்பல கல்வி தந்து இந்தப் பாரை உயர்த்திட வேண்டும்’ என்ற பாரதியின் கருத்தை மெய்ப்பிக்கும் வகையில் பாலர் பள்ளி முதல் பல்கலைக்கழகப் பாடம் வரை கற்பிக்கும் கல்வித் தோட்டமாகக் கோவிலூர் மலர்ந்தது.

ஆங்காங்கே இருந்த கோவிலூர்த் தொடர்பான திருக்கோயில்கள் மடங்கள் புதுப்பிக்கப்பட்டன. நூல்களின் பதிப்புப் பணிகள் சமூகப் பணியாக முதியோர்க்கான உதவிகள், மாணாக்கர்களின் உயர் கல்விக்கு உதவுதல் போன்றவற்றால் கோவிலூர் மடாலயப் பெருமை கோபுர உச்சிக்கு உயர்ந்தது.

அவ்வுச்சியின் மகுடத்தில் பதித்த மாணிக்க நிகழ்வாகவே, சுவாமிகள் நாச்சியப்பரின் அழைப்பிதற்கேற்ப மேதகு குடியரசுத் தலைவர் அப்துல் கலாம் அவர்களின் (2006 செப்டம்பர் 24) வருகை கோவிலூர்க்கு அமைந்த வரப்பிரசாதமாக இருந்தது. இதனால் கோவிலூரின் புகழ் ஓங்கி விளங்கியது எனலாம்.

இந்நிலையில் நானிலம் போற்றும் நாச்சியப்ப சுவாமிகளின் மடாலயச் செயல்பாடுகளுக்கெல்லாம் உறுதுணையாக, நிருவாகி மெய்யப்பரும் தணிக்கையர் நாராயணரும் காப்பியக் கவிஞர் மீனவரும் இருந்தார்கள்.

கோவிலூர் ஆதீனங்கள் வரிசையில் சகலாகமப் பண்டிதர் போலச் சகல கலா வல்லுநராக வீற்றிருந்த நாச்சியப்ப ஞான தேசிகர் தாம் மானசீகமாக வழிபட்டு வந்த சிதம்பரம் ஆனந்த நடராசரின் ஆலயம் ஒன்றைத் ‘தென் சபாநாயகர் திருக்கோயில்’ என்ற பெயரில் கோவிலூரில் அமைக்கத் திட்டமிட்டபடி அக்கோயில் கட்டடத் திருப்பணியைத் தொடங்கினார்கள்.

“நினைப்பு நம்மதாக இருக்கலாம்.

Koviloor Digital Library

முடிவு இறைவனிடம்” என்பதற்கேற்ப ஆலயத் திருப்பணி தொடரும் நிலையில் சுவாமிகள் பரிபூரணம் பெற்றாலும் சுவாமிகளோடே பூவும் மணமுமாய் இருந்தவகையில் பதின்மூன்றாம் பட்டமாக அருட்பீடம் கொண்ட சீர் வளர் சீர் மெய்யப்ப ஞான தேசிக சுவாமிகள் மேற்படி ஆனந்த நடராசர் திருக்கோயில் கட்டுமானப் பணியைத் தொட்டுத் துலக்கினார்கள்.

தொடர்ந்த அப்பணியின் இடையில் மெய்யப்ப சுவாமிகளின் பரிபூரணம் நிகழ்ந்துவிட்டது. எனினும் நாச்சியப்ப சுவாமிகளோடும் மெய்யப்ப சுவாமிகளோடும் உடனிருந்து பழகியதால் மணமுள்ள மலரின் மகரந்த சேர்க்கைபோல் அவ்விரு சுவாமிகளின் மன ஓட்டங்களை நன்கு புரிந்தவராகப் பதினான்காவது பட்டமாய் அருளாட்சி கொண்டருளிய சீர் வளர் சீர் நாராயண ஞான தேசிக சுவாமிகளின் அருளாணையால் ஆடவல்லான் ஆலயப்பணி நிறைவடைந்த அளவில் தில்லைவாழ் அந்தணர்களால் 7.06.2023ல் திருக்குட நன்னீராட்டு விழா நடந்தேறியதென்பது நாராயண ஞான தேசிக சுவாமிகளின் புண்ணியப் பேறாகும்.

சைவத்தில் கோயில் என்றால் தில்லையைக் குறிக்கும். வேதாந்தத்தில் கோவில் என்றால் கோவிலூரைக் குறிக்கும்.

இங்ஙனம் தனித் தனியாகக் கருதப்படினும் இரண்டும் ஒன்றே என்ற இணைப்பு தென் சபாநாயகர் திருக்கோயிலால் கோவிலூருக்குக் கிட்டியதென்பது நாராயண ஞான தேசிக சுவாமிகளின் அருளாட்சி காலத்தில்தான் என்பது கல்வெட்டுப் பதிவான சகாப்த சான்றான நிகழ்வாம் எனலாம்.

ஆக, சிதம்பரக் கோயிலூரும் காரைக்குடிக் கோவிலூரும் ஒன்றே என நினைக்குமாறு பட்டினத்தார் தாம் பாடிய ஐந்து நூல்களுள் ஒன்றாகக் கோயில் நான்மணிமாலை என்றதைத் தில்லை நடராசர் பற்றியதாகவே அமைத்தார்.

மேலும், உமாபதி சிவனார் கோயிற்புராணம் எனத் தில்லை பற்றிய சிதம்பர மான்மியத்தைத் தந்தார். கோவிலூர்ப் புராணம் என மகா வித்துவான் மீனாட்சி சுந்;தரம் பிள்ளைப் பாடினார்கள். இப்படியாகத் திரு என்ற அடைமொழி இல்லாத கோயில், கோவில் என்ற சொற்கள் இருவேறு ஊர் பெருமையைக் கொண்டாலும், சிதம்பரமாம் அக்கோயிலே கோவிலூர்க் கோயிலாக உருக்கொண்டுள்ளது என்பதால் கோவிலூர் வரலாற்றுச் சிறப்பில் இருமையில் ஒருமையாய்க் கோவிலூரே கோயிலூராய், கோயிலூரே கோவிலூராயிற்று எனலாம் என்க!

சீர் வளர் சீர் நாச்சியப்பர்
நாற்றுவிட
சீர் வளர் சீர் மெய்யப்ப தேசிகரின்
சீர்த்தொண்டைச்
சீர் வளர் சீர் நாராயணரும்
சிதம்பரக் கோயிலை
நாட்டினரே கோவிலூரில்
தான்!

Koviloor Digital Library

கோவிலூரின் கதை

கோவிலூர் ஆண்டவர் திவ்ய வரலாறு

பொருள் வைத்த சேரி தந்த மெய்ப்பொருள்

- கனகு
காரைக்குடி

மனிதர்கள் தமது உடல் தோற்றத்தை பல்வேறு வகை ஆடைகள் அணிந்து அழகு படுத்துகின்றனர். இந்த ஆடைகளை நெய்து தயாரித்துத் தரும் நெசவாளர்கள் மனிதர்களின் மானத்தையும் அழகையும் காப்பவர்கள். ஆள் பாதி, ஆடை பாதி இதுவே மனித நாகரீகம்.

உழவிற்கும் தொழிலிற்கும் வந்தனை செய்வோம் என்றார் பாரதியார். உழவு என்பது விவசாயத்தைக் குறிக்கும். தொழில் என்பது நெசவுத் தொழிலைக் குறிக்கும். நெசவுச் தொழில் செய்து, மனித உடலையும், மனித மனத்தையும் அழகுபடுத்தய அன்பர்கள் பலர் உண்டு. வள்ளுவரும் நெசவுத் தொழில் செய்தவர். கபீர்தாசரும் உடலையும் உள்ளத்தையும் காக்கும் நெசவுத்தொழில் செய்தவர். பொருள் வைத்த சேரி என்ற இடத்தில் வாழ்ந்த உகந்தலிங்க ஞான தேசிக சுவாமிகளும் நெசவுத்தொழில் செய்தவர்.



சீர் வளர் சீர் முத்தி ராமலிங்க ஞான தேசிக சுவாமிகள்

தற்காலத்தில் வாழ்க வளமுடன் என்ற மங்கல வாசகத்தை உலகிற்களித்த ஞானி வேதாத்திரி மகரிஷியும் நெசவுத்

Koviloor Digital Library

தொழில் புரிந்தவர். இவ்வாறு நெசவுத் தொழில் புரிந்தவர்கள் மனிதர்தம் அக அழகையும், புற அழகையும் வளமைப் படுத்தியவர்கள். அவர்களின் வழியில் உடலையும் உள்ளத்தையும் பேணி பண்படுத்தி வாழ வேண்டியது மக்களின் வாழ்க்கைக் கடமையாகும்.

பொருள்வைத்த சேரியில் உகந்தலிங்க ஞான தேசிகர் தன் வருவாயை எண்ணிக் கொண்டிருந்தார். நெசவுத்தொழிலில் ஓரளவிற்கு வருமானம் வந்து கொண்டுதான் இருந்தது. தன் வருவாயை அவர் மூன்றாகப் பகுத்தார். ஒன்றில் நாளைக்குத் தன் தொழிலுக்கு வேண்டிய பொருள்களை வாங்கிட செலவழிப்பது அவரின் இயல்பு. மற்றொன்றில் தன் குடும்பச் செலவுகளுக்கு என்று ஒதுக்கி வைத்தார். மூன்றாம் பகுதியை தன் இல்லத்திற்கு வரும் அடியவர்க்கு உணவு தருதல், அவர்களுக்கு வேண்டுவன தருதல் என்று செலவழித்தார். இம்மூன்றில் மூன்றாவதைச் செலவழிக்கையில் அவரின் மனம் பெரிதும் மகிழ்ந்தது.

நாள்தோறும் இப்படித்தான். மூன்றாய் பிரித்த வருவாய், நன்றாய் வளர்ந்தது. நாளும் அடியவர்கள் உகந்தலிங்க ஞான தேசிகர் இல்லத்திற்கு வந்து உணவருந்தினர். அவருடன் ஞானத்தைக் கலந்து பேசி மகிழ்ந்தனர்.

அன்று சிக்கலில் இருந்து ஓர் ஆன்மப் பக்குவப்பட்ட இளைஞர் உகந்த லிங்க ஞான தேசிகரைப் பணிந்து வணங்க வந்தார். அவருடனே என்றும் அவரைப் பிரியாது இருக்கும் நல்லான் என்ற நண்பரும் வந்தார். வந்த இளைஞர் சகல கலைகளிலும் தேர்ச்சி பெற்றவராகக் காணப்பட்டார். தன் மேனி முழுவதும் திருநீறு பூசியவராக விளங்கினார். மேலும் அவர் தன் நண்பன் நல்லானோடு தெய்வ சம்பந்தமான விஷயங்களை விவாதிப்பார். தென்கிழக்கு திசையில் இருந்த திருவாசல் மடம்தான் அந்த இளைஞரின் இருப்பிடமாக விளங்கியது. தனக்கான குருவைத் தேடிடும் பார்வை அவரிடத்தில் இருந்தது. தனக்கென யாதுமின்றி இறையுளத்துடன் திரிபவராக விளங்கிய அந்த இளைஞரை உகந்த லிங்க ஞான தேசிகர் திருக்கண் நோக்கிப் பார்த்தார்.

அப்பார்வையிலேயே தான் தேடிவந்த ஞான குரு இவர் தான் உணர்ந்து கொண்டார் அந்த இளைஞர். அந்த இளைஞரிடத்தில் அவரது பெற்றோர் பற்றியும் ஊர் பற்றியும் உகந்த லிங்க ஞான குரு வினவினார்.

இறைபற்றைத் தவிரக் குடும்பப் பற்று அற்று இருந்த அந்த இளைஞரிடம் கேட்கப் பட்ட இந்தக் கேள்விகள் அர்த்தமற்றவையாக விளங்கின. இருந்தாலும் கேட்பது குரு என்பதை உணர்ந்து அவர் பதில் தந்தார்.

“என்பெயர் முத்து ராமலிங்கம். ஆனால் முத்தி ராமலிங்கம் என்றே என்னை

Koviloor Digital Library

நான் அழைத்துக்கொள்வதுண்டு. முத்தி நிலை அடையவேண்டும் என்பதாலேயே நான் என் பெயரை முத்திராமலிங்கம் என்று வைத்துக் கொண்டேன்.

இந்த முத்தி ராமலிங்கம் முத்தி பெறுவதற்காக உகந்தரை உவந்து வந்துள்ளது. தாங்கள் எனக்கு நல்வழி காட்ட வேண்டும்.

என் ஊர் பற்றி தாங்கள் கேட்டதற்கு நான் பதில் சொல்ல வேண்டும். வணிகர்கள் வாழும் காரைக்குடி எனது ஊர். அந்த ஊரில் என் தந்தையான மெய்யப்பரும் தாயான வள்ளியம்மையும் வாழ்ந்து இல்லறத்தின் விளைபயனாய் என்னைப் பெற்றெடுத்தார்கள். பெற்றவர்கள் அவர்கள் என்றாலும் என்னை ஆட்கொண்டு ஞானத் தந்தையாக விளங்கவேண்டியவர்கள் தாங்களே" என்று சொல்லி அவரிடத்தில் தன்னை அந்த இளைஞர் முற்றிலும் ஒப்படைத்தார்.

தன்னை நாடிவந்த நல்ல ஆன்மாக்களை ஈடேற்றும் பெரும்பணியைச் செய்துவந்தவர் பொருள் வைத்த சேரி உகந்த லிங்க ஞான தேசிகர். அவரும் இந்த இளைஞனின் அருள் நோக்கத்தை அறிந்து அவருக்கு ஞான உபதேசம் அளிக்க திருக்கண் பார்வை சேர்த்தார்.

நமது நல் இளைஞர், கோவிலூர் ஆண்டவர் என்று பின்னாளில் அழைக்கப்பெற்ற முத்திராம லிங்கர் தமது ஞானத் தேடலின் வழியாகச் சிறந்த ஆசிரியரை, நெறிகாட்டும் நல்லவரை உகந்த லிங்க ஞான குருவை அடைந்து ஞானவழிக்குத் தொடக்கம் பெற்றார்.

அன்றிலிருந்து ஞானம் அடைய விரும்பும் இளைஞனாக அவர் ஆனார். அப்போது அவருக்கு வயது பதின் மூன்று அவ்வயதிலேயே ஞானத்தின் வலிமையை அவர் உணர்ந்து கொண்டார்.

இவ்வாறு முத்தி ராமலிங்கம் வாழ்க்கையில் பொருள் வைத்த சேரி வெறும் பொருள் வைத்த சேரியாக மட்டும் இல்லாமல் மெய்ப்பொருளை ஆண்டவர் மனதில், முத்திராமலிங்கவர் மனதில் வைத்த சேரியாக விளங்கியது. பொருள் வைத்த சேரிக்கு நாமும் போவோம். மெய்ப்பொருள் பெறுவோம்.

பொருள் வைத்த சேரி வழித்தடத்திற்கு கீழே உள்ள லிங்க்கை கிளிக் செய்க...

shorturl.at/bsw08

இணைய வழி தேவார இன்னிசை வகுப்பில் கலந்து கொள்ள விரும்புபவர்கள் 94433 35312 இந்த எண்ணை வாட்சப்-பில் தொடர்பு கொள்ளவும்

Koviloor Digital Library

கோவிலூர் ஆதீன வெளியீடுகள்
கோவிலூர் புதையல்கள் - 1

கோவிலூர் ஆண்டவரின் சுவானுபவத் திருவாக்கு

- கு. அன்பு மெய்யப்பன்,
உதவிப் பேராசிரியர்,
இராமசாமி தமிழ்க் கல்லூரி,
காரைக்குடி - 3.

தமிழால் ஆன்மீகமும், ஆன்மீகத்தால் தமிழும் வளர்ந்ததற்கு நிறையச் சான்றுகள் உள்ளன. அவ்வாறு தமிழையும் ஆன்மீகத்தையும் ஒன்றாக வளர்த்த மடம் கோவிலூர் வேதாந்த மடம். மடத்தை நிறுவிய ஆண்டவர் தொடங்கி, மடாதிபதிகளாக இருந்த பலரும் பாடல் இயற்றி ஆன்மீகப் பயிரைத் தமிழால் வளர்த்துள்ளனர். இப் பீடாதிபதிகளிடம் மாணாக்கராகப் பயின்ற பலரும் பாடல்கள் இயற்றியுள்ளனர். எனவே கோவிலூர் மடம் வேதாந்தத் தத்துவத்தை முன்வைத்து, பல அரிய நூல்களை அளித்துள்ளது. கோவிலூர் வேதாந்த மடத்தின் தமிழ்ப் பணிகளை ஒவ்வொன்றாய் அறிவது என்பது இக்காலத்திற்கு ஆன்மீகம் வளர்க்கத் தேவைப்படுவதாகும். அந்நிலையில், கோவிலூர் மடத்தின் தமிழ்ப் பணியில் மூத்தவரான முதல்வரான சீர்வளர் சீர் முத்துராமலிங்க ஞான தேசிகரால் இயற்றப் பெற்ற சுபானுபவத் திருவாக்கு எனப்படும் சுபானுபவத் திரட்டு என்ற கவிதை நூல் தரும் செய்திகளை இக்கட்டுரை அளிக்கின்றது.

ஆண்டவர் என்று அழைக்கப்படும் சீர்வளர்சீர் முத்துராமலிங்க ஞான தேசிகர் தம் வாழ்வில் உய்த்து உணர்ந்த உணர்வு களைப்


உ.
சிவமயம்
சமிவன க்ஷேத்திர மென்னும்
கோயிலூர்ச் சிவஸ்தலத்தில்
எழுந்தருளியிருந்த
ஸ்ரீலஸ்ரீ
முத்துராமலிங்க ஆண்டவர்
ஞான தேசிக சுவாமிகள்
திருவாய்மலர்ந்தருளிய
சுவானுபவத்
திருவாக்கு

Koviloor Digital Library

பாடல்களாக எழுதியுள்ளார். அப்பாடல்களின் தொகுப்பு “சுவானுபவத் திருவாக்கு” எனும் நூலாகத் தொகுக்கப்பட்டுள்ளது. ஆண்டவரின் வாழ்வில் ஏற்பட்ட இனிய அனுபவங்களின் தொகுப்பு எனும் கருத்தால் இப்பெயர் பெற்றிருக்கலாம்.

ஆண்டவர் எழுதிய பாடல்களின் தொகுப்பான இந்நூல் அவர் முக்தி அடைந்த பிறகு நான்கு முறை பதிப்பிக்கப்பட்டுள்ளது. முதன் முதலில் 1925ஆம் ஆண்டில் கோவிலூரின் 7ஆம் பட்டமாக இருந்த சீர் வளர் சீர் மகாதேவ ஞானதேசிக சுவாமிகளின் காலத்தில், பனையப்பட்டி புண்ணியசீலர் முத்துக் கருப்பஞ் செட்டியார் அவர்களின் குமாரர் சி.மு.சி. சின்னையா செட்டியாரால் அச்சிடப்பட்டுள்ளது. (இரக்தாஷி வருடம் தை மாதம்). அதன் பின்னர் அந்நூலின் மறு பதிப்பு அதற்கடுத்த 1926ஆம் ஆண்டில் பதிப்பிக்கப்பட்டுள்ளது. பின்னர் 1946ஆம் ஆண்டில் காரைக்குடி கோவிலூரார் வீட்டு வாரிசுகளால் மீண்டும் பதிப்பிக்கப்பட்டுள்ளது. இறுதியாக 2000மாவது ஆண்டில் சீர் வளர் சீர் நாச்சியப்ப ஞானதேசிக சுவாமிகள் காலத்தில், டாக்டர் சுப. அண்ணாமலை அவர்களால் உரையோடு பதிப்பிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. இப்பாடல்கள் யாரால் எப்பொழுது தொகுக்கப்பட்டன என்ற செய்திகளை அறிய முடியவில்லை.

இந்நூல் இரண்டு பகுப்புகளாகப் பகுக்கப்பட்டுள்ளது.

1. சுவானுபவத் திருவாக்கு
2. சுவானுபவத் திருவாக்கியங்கள்

சுபானுபவத் திருவாக்கு முழுமையும் கவிதை நடையில் அமைந்துள்ளது. இது தெய்வ வணக்கம், குரு வணக்கம், மனத்திற்கு அறிவுறுத்தல் எனும் பகுப்புகளைக் கொண்டுள்ளது. சுபானுபவத் திருவாக்கியங்கள் எனும் பகுதி முழுமையும் உரைநடையாக அமைந்துள்ளது.

ஆண்டவரின் கவிதைகள் தெளிந்த நீரோடை போன்று அமைந்துள்ளன. அவர் முழுமையாக உணர்ந்த பிரமத்தை (முழுமுதற் பொருள்) நம்மையும் உணர வைக்கிறார். மிகவும் அறிவதற்கு அரிதான வேதத்தத்துவத்தை எளிமைப்படுத்தியிருக்கிறார். அதற்கு எடுத்துக் காட்டாக ஒரு பாடலைக் காட்டலாம்,

“சுவர் உறையும் ஓவியங்கள்
சுவரே என்றல்
சுபாவமதி போல்பரத்தில் தோன்றா நின்ற
பவமுதலாம் சங்கற்ப விகற்பம் எல்லாம்”

என்ற பாடலில், சுவரில் வரைந்த ஓவியங்கள் உருவமாகத் தோன்றினாலும் சுவர் என்றே

Koviloor Digital Library

கூறப்படுவது போல், பிறப்பு இறப்பு முதலிய அனைத்தும் ஓவியம் போல் வெளிப்பார்வைக்குத் தோன்றினாலும், அவை அனைத்தும் மனத்தின் கற்பனையே. அவை சுவர் போன்ற பரம்பொருளே என விளக்குகிறார்.

நான்கு கட்டளைகள்

உலகப் பற்றுகளிலிருந்து விடுபட ஆண்டவர் நான்கு கட்டளைகளைக் கூறுகிறார்.

"வானாடர் மணம்பொருந்தும்
வாழ்வுநினை யாதே
மண்நாடர் பதிஅடையும்
வாழ்க்கைநினை யாதே
நான்நான்என்று இல்வாழ்வில்
நண்ணிஉழ லாதே
நாலிரண்டு சமயநெறி நாடிஅலை
யாதே."

என்ற பாடலில் ஞான வாழ்க்கை பெற நான்கு கட்டளைகளை ஆண்டவர் உலகத்தாருக்கு அருளியுள்ளார்.

1. தேவர்கள் காதலித்துக் கூடும் காந்தர்வ மணம் செய்து கொள்ளும் வாழ்வை நினையாதே.

2. நாடாளும் மன்னர்கள் தமது தலைநகரில் பெறும் சுகபோக வாழ்வை நினையாதே

3. நான் நான் என்று எதிலும், எங்கும், எப்போதும் தன்முனைப்போடு வாழும் இல்லறத்தானாக வாழ்வில் ஈடுபடாதே தான் என்ற சுயநலத்தோடு வாழும் இல்லற வாழ்வில் ஈடுபடக் கூடாது.

4. இறைவனை அடைவதற்கான வழிகளைக் காட்டுவதாகச் சொல்லப்படும் எட்டு வகை சமய நெறிகளை நாடிச் செல்லாதே. பிரமம் ஒன்றே உண்மை என்பதே சரியான நெறி என்று உலகத்தார்களுக்கு நான்கு ஞானக் கட்டளைகளை வகுத்துரைக்கிறார் ஆண்டவர். இந்நான்கையும் பெற்று ஞானம் பெற உலக உயிர்கள் முற்பட வேண்டும்.

தென்சபாநாயகர் கோவில் கட்டளைகளில் பங்கு கொள்ள விரும்புபவர்கள் 94433 35312 இந்த எண்ணை தொடர்பு கொள்ளவும்.

திருநெல்லை இணைய வழி திங்களிதழை பெற விரும்புபவர்கள் 94433 37011 இந்த எண்ணிற்கு வாட்சப்-பில் தொடர்பு கொள்ளவும்.

Koviloor Digital Library

கோவிலூர் ஆனந்த நடராஜ தரிசனம்

கோவிலூர் தென்சபாநாயகர் திருக்கோயில்

கோவிலூரில் பன்னிரண்டாம் பட்டமாக விளங்கிய சீர் வளர் சீர் நாச்சியப்ப சுவாமிகள் தில்லை எனப்படும் சிதம்பரம் ஆனந்த நடராசர் கோயில் போல ஒன்றைக் கட்ட எண்ணம் கொண்டார்கள். அவ்வெண்ணம் தற்போது தென் சபாநாயகர் கோயிலாக முழுமை பெற்றுள்ளது.

கோவிலூரில் சைவத் தலைநகராம் சிதம்பரத்தைப் போலவே அமைக்கப்பெற்றுள்ள இத்தென் சபாநாயகர் கோயிலில் அருள்மிகு சிவகாம சுந்தரி உடனாய ஆனந்த நடராசர் மூல தெய்வமாக விளங்குகிறார். அருள்மிகு முக்குறுணி விநாயகர், சண்முகர், கோவிந்தராஜப் பெருமாள், திருமூலட்டநாதர், சிவகாமி அம்மன், சண்டிகேசர் போன்ற தெய்வங்களுக்கான சன்னதிகளும் சிதம்பரத்தில் அமைந்துள்ளது போலவே இங்கு அமைக்கப்பெற்றுள்ளன.

இக்கோயிலின் திருக்குடமுழுக்கு விழா 7.6.2023 அன்று நடைபெற்றது. தொடர்ந்து மண்டலாபிஷேகம் சிறப்புடன் நடைபெற்றது. நாள்தோறும் தில்லையில் நடைபெறும் வழிபாடுகள் அனைத்தும் இங்கும் நடைபெற்றுவருகின்றன. தென்சபாநாயகர் திருக்கோயிலான அருள்மிகு நடராசர் திருக்கோயிலில் நடைபெற்று வரும் வழிபாடு நிகழ்ச்சிகள் பின்வருமாறு.

அருள்மிகு ஆனந்த நடராஜருக்குத் தில்லைவாழ் அந்தணர்கள் எனப்படும் தீட்சிதர்களால் கால முறை வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன.

Koviloor Digital Library

படிகலிங்கத்துக்கு அபிஷேக ஆராதனைகள், காலை 9.00 மணி, பகல் 11.30மணி, மாலை 6.00 மணி, இரவு 7.30 மணி என நான்கு கால வழிபாடுகள் நடைபெறுகின்றன. ஒவ்வொரு கால வழிபாட்டின் போதும் சிதம்பர ரகசிய தரிசனம் செய்யலாம்.

பிரதோஷ தினத்தன்று மாலை 6.00 மணிக்கு பிரதோஷ மூர்த்திகள், நந்தியெம் பெருமானுக்கு பூஜைகள் நடைபெறுகின்றன. ஒவ்வொரு தேய்பிறை அஷ்டமி அன்றும் அருள்மிகு சொர்ண ஆகர்ஷண பைரவருக்கு சிறப்பு பூஜைகள் நடைபெறுகின்றன.

ஸ்ரீ ஆனந்த நடராஜ மூர்த்திக்கு ஒரு ஆண்டில் நடைபெறும் ஆறு மஹாபிஷேகங்கள் இங்கும் நடைபெறுகிறது. ஆனித்திருமஞ் சனம், ஆவணி மாத சிரவண அபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது. பக்தகோடி பெருமக்கள் அனைவரும் இவ்வழிபாடுகளில் நாளும் கலந்து கொண்டு இறையருள் பெற வேண்டுகிறோம்.

தென்சபாநாயகர் திருக்கோவிலுள் அமைந்துள்ள அருள்மிகு கோவிந்தராஜப் பெருமாள் மற்றும் உற்சவ மூர்த்திகளுக்கு சனிக்கிழமை தோறும் காலை சிறப்பு அபிஷேக ஆராதனைகள் நடைபெறுகின்றன. ஒவ்வொரு மாதம் வளர்பிறை ஏகாதசி அன்றும் மூலவருக்கும் அபிஷேகம் நடைபெறுவது குறிப்பிடத்தக்கது.

பெருமாள் சன்னதியில் திருக்கோட்டியூர் சார்ந்த பட்டர் பூசை முறைகளை மேற்கொள்கிறார்.

தென்சபாநாயகர் கோவிலில் இனி நடைபெற உள்ள சிறப்பு வழிபாடுகள் பின்வருமாறு

- புரட்டாசி 8ஆம் தேதி 25.09.2023 வளர்பிறை ஏகாதசி நாளில் காலையில் பெருமாள் அபிஷேகம்
- புரட்டாசி 10ஆம் தேதி 27.09.2023 அன்று மாலை பிரதோஷம்
- புரட்டாசி 11ஆம் தேதி 28.09.2023 அன்று மாலை ஸ்ரீ ஆனந்த நடராசர் மகா அபிஷேகம்
- புரட்டாசி 19ஆம் தேதி 6.10.2023 அன்று மாலை தேய்பிறை அஷ்டமி வைரவர் அபிஷேகம்
- புரட்டாசி25ம் தேதி 12.10.2023 அன்று மாலை பிரதோஷம்

வழிபாட்டில் பங்குபெற வாய்ப்பு:

தென் சபாநாயகர் கோயிலில் நடைபெறும் அபிஷேகங்களுக்குப் பால், தேன், தயிர், பன்னீர் போன்ற பொருட்கள் தந்து பங்கு கொள்ளலாம். தவிர நித்தியப்படி கட்டளைகள், மாதக் கட்டளைகள் மற்றும் சிறப்புக் கட்டளைகளில் பங்கு பெற அரிய வாய்ப்பு உள்ளது. பால் கட்டளை, நெய் (விளக்கு) நல்லெண்ணை (காப்பு, விளக்கு), தேங்காய், பழம் படிகலிங்க பூசை நைவேத்தியம், இதர பூஜை சாமான்கள், நைவேத்தியக் கட்டளை, படிகலிங்க கால பூஜைகள் மற்றும் மலர், மாலைகள் கட்டளை ஆகியவற்றில் பங்கு கொள்ள விரும்புவோர் கோயில் அலுவலகத்தையோ அல்லது 9443335312 என்ற எண்ணிலோ தொடர்பு கொள்ளவும். முதலில் வருபவருக்கே முன்னுரிமை என்பதால் உடன் தொடர்பு கொள்ள வேண்டுகிறோம்.

Koviloor Digital Library

தென்சபாநாயகர் கோயில் குடமுழுக்கு மற்றும் மண்டலாபிஷேக காட்சிகள்

யாகசாலைக்கு திரவியங்கள் கொண்டு செல்லுதல்

கோவிந்தராஜ பெருமாள் யாகசாலை பூர்ணாகுதி

Koviloor Digital Library

நடராஜர் யாகசாலை பூர்ணாகுதி

Koviloor Digital Library

நாச்சியப்ப சுவாமிகள் திருமுறை பாடசாலை துவக்கிவைக்கப் பெற்றது

(இ–வ)
திரு.எம்.எல்.எம்.பழனியப்பன், திரு.ஏகப்பன், சீர் வளர் சீர் நாராயண ஞான தேசிக சுவாமிகள், திரு.முரளீதரன், பேரூர் ஆதினம் திருப்பெருந்திரு மருதாசல அடிகள், திரு. பெரியணன், திரு.ஆறுமுகம், திரு.தான்ஸ்ரீ பழனியப்பன், கோவை திரு. அனந்தகிருஷ்ணன் மற்றும் திரு.அழகப்பன்.

Koviloor Digital Library

பேரூர் ஆதினம் திருப்பெருந்திரு மருதாசல அடிகள் மற்றும் சீர் வளர் சீர் நாராயண ஞான தேசிக சுவாமிகள் ஸ்தல விருட்சம் தில்லை மரம் நடுதல்.

யாகசாலையில் திரு. தான்ஸ்ரீ பழனியப்பன், பேரூர் ஆதினம் திருப்பெருந்திரு மருதாசல அடிகள் மற்றும் சீர் வளர் சீர் நாராயண ஞான தேசிக சுவாமிகள்.

Koviloor Digital Library

சீர் வளர் சீர் நாராயண ஞான தேசிக சுவாமிகள் மற்றும் பேரூர் ஆதினம் திருப்பெருந்திரு மருதாசல அடிகள் முன்னிலையில் கோவை அனந்த கிருஷ்ணன், பெரியபுராணம் சொற்பொழிவு ஆற்றினார்.

நகரத்தார் நாயன்மார் குறித்து சொற்பொழிவாற்றிய சிரவை ஆதீன பேச்சாளர் திரு.பிரனேஷ் சங்கர் கௌரவிக்கப்படுகிறார்.

Koviloor Digital Library

கும்மி நடனத்தை துவக்கி வைத்தல்

மாணிக்கவாசகர் வரலாறு கும்மி

மாணிக்கவாசகர் கும்மி ஒருங்கிணைப்பாளர் திரு.நவீன் அவர்களை சீர் வளர் சீர் நாராயண ஞான தேசிக சுவாமிகள் கௌரவித்தார்.

Koviloor Digital Library

தென்சபாநாயகர் கோவிலை நிர்மாணித்த பத்மஸ்ரீ முத்தையா ஸ்தபதி அவர்கள் உரை நிகழ்த்தினார்.

பத்மஸ்ரீ முத்தையா ஸ்தபதி அவர்கள் கௌரவிக்கப்படுகிறார்.

Koviloor Digital Library

தென்சபாநாயகர் மற்றும் கோவிந்தராஜ பெருமாள் கடம் புறப்பாடு

Koviloor Digital Library

சிவகாம சுந்தரி அம்பாள் உடனுறை தென்சபாநாயகர் கும்பாபிஷேக விழா மிக சிறப்பாக நடைபெற்றது

ஸ்ரீதேவி பூதேவி தாயார் உடனுறை கோவிந்தராஜ பெருமாள் மகா சம்ப்ரோக்ஷணம் மிக சிறப்பாக நடைபெற்றது

Koviloor Digital Library

திரு.சொ.சொ.மீ.சுந்தரம் மற்றும் திரு.வி.பழனியப்பன் அவர்கள் கும்பாபிஷேக வர்ணனை நிகழ்த்தினர்

திரு.முத்துக்குமார், திரு.முரளீதரன், திரு.ஆறுமுகம், திரு.வி.பழனியப்பன், சீர் வளர் சீர் நாராயண ஞான தேசிக சுவாமிகள், திரு.சொ.சொ.மீ.சுந்தரம், ஆடிட்டர் திரு.சிவசுப்ரமணியன், திருமதி. சிவசுப்ரமணியன் மற்றும் திருமதி.மீனாட்சி.

Koviloor Digital Library

கோவிந்தராஜ பெருமாள் பிரசாதம் பெற்றுக் கொள்ளுதல் – சிருங்கேரி சாரதா பீடம் தலைமை நிர்வாகி திரு.கௌரிசங்கர் ஸ்வாமிகள், துளாவூர் சுவாமிகள், பாதரக்குடி சுவாமிகள், கோவிலூர் சுவாமிகள், பழனி சாது ராமசாமி அடிகள்.

நடராஜர் சன்னதியில் கும்பாபிஷேக தீர்த்தம் பெற்றுக் கொள்ளுதல் – திருப்பெருந்திரு பழனி சாது ராமசாமி அடிகள், சிருங்கேரி சாரதா பீடம் தலைமை நிர்வாகி திரு.கௌரிசங்கர் ஸ்வாமிகள், சீர் வளர் சீர் நாராயண ஞான தேசிக சுவாமிகள், திரு.சிவராம தீட்சிதர்.

Koviloor Digital Library

அருள்மிகு முக்குறுணி விநாயகர்

அருள்மிகு வள்ளி, தெய்வானை உடனுறை சண்முகர்

அருள்மிகு ஸ்ரீ தேவி, பூதேவி உடனுறை கோவிந்தராஜ பெருமாள்

Koviloor Digital Library

மண்டலாபிஷேகத்தில் அருள்மிகு தென்சபாநாயகர் கலச பூஜை

மண்டலாபிஷேகத்தில், அருள்மிகு கோவிந்தராஜ பெருமாள் கும்ப வழிபாட்டில் பூரணாகுதி.

Koviloor Digital Library

தென்சபாநாயகர்–சிவகாம சுந்தரி அம்பாளுக்கு அபிஷேகம் நடைபெற்றது

Koviloor Digital Library

படிகலிங்க பூஜை நடைபெற்றது

ஆத்தங்குடி டாக்டர் முத்தையா அவர்களும், தெய்வானை ஆச்சியும் மண்டலாபிஷேக பூஜையில் கலந்து கொண்டனர்.

Koviloor Digital Library

சீர் வளர் சீர் நாராயண ஞான தேசிக சுவாமிகள் கலந்து கொண்ட நிகழ்ச்சிகள்

கோவிலூர் மடலாயத்தின் பதினான்காம் பட்டமாக இவ்வாண்டு ஜனவரி மாதம் 26 ஆம் நாள் சீர் வளர் சீர் நாராயண ஞான தேசிக சுவாமிகள் அருளாட்சி ஏற்றுக் கொண்டார்கள். அது முதல் இந்தியாவின் பல நகரங்களுக்குச் சென்று தன் ஆன்மீக ஆசிகளை வழங்கி வருகிறார்.

♦ காரைக்குடியில் 02.04.2023 அன்று கம்பன் அறநிலை நடத்திய 85வது ஆண்டு கம்பன் திருநாள் நிகழ்ச்சியில் சீர் வளர் சீர் நாராயண ஞான தேசிக சுவாமிகள் கலந்து கொண்டு ஆசியுரை வழங்கினார்கள்.

காரைக்குடி கம்பன் விழாவில் கோவிலூர் சுவாமிகளின் ஆசியுரையும் திரு ப.சிதம்பரத்தின் தலைமை உரையும்

காணொளியை காண கீழே உள்ள லிங்க்கை கிளிக் செய்க...

shorturl.at/aiLOZ

♦ புதுடெல்லியில் 28.5.2023 தேதியன்று நடைபெற்ற புதிய பாராளுமன்ற கட்டடத் திறப்புவிழாவில் கலந்து கொண்டு பாரதப் பிரதமரிடம் தமிழக மடாலயங்கள் சார்பில் செங்கோல் வழங்கப்பட்டது. அந்நிகழ்வில் பிரதமருக்கு ஆனந்த நடராசர் திருவுருவச் சிலையை வழங்கி ஆசிர்வதித்தார்கள்.

♦ கோவிலூரில் தென்சபாநாயகர் கோயில் குடமுழுக்கு விழா 7.6.2023 அன்று சிறப்பாக நடைபெற்றது.

♦ காசியில் 22.7.2023 முதல் 24.7.2023 வரை நடைபெற்ற, உலக கோயில்கள் மாநாட்டில் மேதகு ஆளுநர் தமிழிசை சௌந்திரராஜன் அவர்களின் முன்னிலையில் சீர் வளர் சீர் நாராயண ஞான தேசிக சுவாமிகள் கலந்து கொண்டு கோயில்களில் நடைபெறவேண்டிய பணிகள் குறித்துச் சிறப்புரை ஆற்றினார்கள்.

காணொளியை காண கீழே உள்ள லிங்க்கை கிளிக் செய்க...

shorturl.at/fzFYZ

Koviloor Digital Library

♦ மதுரையில் 29.7.2023 அன்று நடைபெற்ற திருவாசக விழாவில் கோவிலூர் ஆதீனம், சீர் வளர் சீர் நாராயண ஞான தேசிக சுவாமிகள், திரு சொ சொ மீ சுந்தரம் அவர்களின் 80வது அகவை நிறைவை ஒட்டி நிகழ்த்திய ஆசியுரை.

காணொளியை காண கீழே உள்ள லிங்க்கை கிளிக் செய்க...

shorturl.at/oyF29

♦ சென்னையில் 12.8.2023 அன்று நடைபெற்ற நகரத்தார் எழுத்தாளர்கள் அமைப்பின் தொடக்கவிழாவில் சீர் வளர் சீர் நாராயண ஞான தேசிக சுவாமிகள் கலந்து கொண்டு ஆசியுரை வழங்கினார்கள்.

நகரத்தார் எழுத்தாளர்கள் அமைப்பு தொடக்க விழாவில் சீர் வளர் சீர் நாராயண ஞான தேசிக சுவாமிகள் நிகழ்த்திய உரை

காணொளியை காண கீழே உள்ள லிங்க்கை கிளிக் செய்க...

shorturl.at/jzVZ5

♦ கோவை, குருந்தமலையில் 14.8.2023 அன்று கோவிலூர் ஆதினம், சீர்வளர்சீர் நாராயண ஞான தேசிக சுவாமிகள் முன்னிலையில் கானாடுகாத்தான், தொழிலதிபர் Dr. M.A.M.R. முத்தையா (எ) ஐயப்பன் அவர்கள் வெள்ளி ஊஞ்சலில் வெள்ளி முருகனைத் தாலாட்டும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு குருந்தமலைப் பாதயாத்திரை செல்லும் நிகழ்ச்சியை தொடக்கி வைத்தார்.

♦ மயிலாடுதுறை அருள்மிகு மயூரநாதசுவாமி திருக்கோயில் குடமுழுக்கு விழாவை முன்னிட்டு 01.09.2023 அன்று நடைபெற்ற நிகழ்ச்சிகளில் திருவாவடுதுறை, மயிலம் பொம்மபுரம், பேரூர், சிரவை ஆகிய ஆதீனங்களுடன் சீர் வளர் சீர் நாராயண ஞான தேசிக சுவாமிகள் கலந்து கொண்டு ஆசியுரை வழங்கினார்கள்.

திருவாவடுதுறை ஆதீன கர்த்தரும் கோவிலூர் ஆதீனகர்த்தரும் வேதம் பயின்ற மாணாக்கர்களுக்கு வழங்கிய ஆசியுரை.

காணொளியை காண கீழே உள்ள லிங்க்கை கிளிக் செய்க...

shorturl.at/cELZ4

♦ சென்னையில் 10.09.2023 நடைபெற்ற திரு இராமநாதன் பழனியப்பன் அவர்களின் கறைகண்டன் சேவடி சேர்ந்த காரைக்கால் அம்மையார் என்ற நூலை வெளியிட்டு சீர் வளர் சீர் நாராயண ஞான தேசிக சுவாமிகள் தலைமையுரை நிகழ்த்தினார்கள்.

காணொளியை காண கீழே உள்ள லிங்க்கை கிளிக் செய்க....

shorturl.at/aeN89

Koviloor Digital Library

♦ காரைக்குடி கம்பன் கழகம் 11.09.2023 அன்று நடத்திய கம்பன் அரங்கம் திறப்புவிழாவில் சீர் வளர் சீர் நாராயண ஞான தேசிக சுவாமிகள் கலந்து கொண்டு கம்பர் நூலகத்தைத் திறந்து வைத்து ஆசியுரை நல்கினார்கள்.

♦ ஓம்காரேஷ்வரில் 21.09.2023 அன்று நடைபெற்ற 108 அடி உயரமுள்ள சங்கராச்சாரிய திருவுருவச் சிலை திறப்பு விழாவில் மத்தியப்பிரதேச முதல்வரின் நேரடி அழைப்பிற்கிணங்க சீர் வளர் சீர் நாராயண ஞான தேசிக சுவாமிகள் கலந்து கொண்டார்கள்.

இணைய வழி தேவார இன்னிசை வகுப்பில் கலந்து கொள்ள விரும்புபவர்கள் 94433 35312 இந்த எண்ணை வாட்சப்-பில் தொடர்பு கொள்ளவும்

Koviloor Digital Library

தேவாரம் பாடிப் பரவுவோம்

கோவிலூர் வேதாந்த மடாலயத்தின் சார்பில் நாதசுர, தவில் வாசிப்பு வகுப்புகள் நடத்தப்பெற்று வருகின்றன. தற்போது இன்னிசையால் இறைவனை வணங்கும் இனிய தேவார வகுப்புகளையும் நமது கோவிலூர் வேதாந்த மடாலயம் ஆரம்பிக்க உள்ளது. தேவார ஓதுவார், திருமிகு திருத்தணி சுவாமிநாதன் அவர்கள் வழிகாட்டலின் படி நேரடி தேவார இசை வகுப்புகள் நாள்தோறும் மாலை நேரத்தில் நடைபெற்று வருகிறது. இவ்வகுப்பு இன்னும் சிறிது காலத்தில் இணைய வழியாகவும் நடைபெற உள்ளது. உங்கள் இல்லங்களுக்குத் தேவார வகுப்புகள் வர உள்ளன. இதில் கலந்து கொள்ளவும் அன்பர்களை அன்புடன் வேண்டுகிறோம்.

தென்சபாநாயகர் கோவில் கட்டளைகளில் பங்கு கொள்ள விரும்புபவர்கள் 94433 35312 என்ற எண்ணை தொடர்பு கொள்ளவும்.

♦♦♦♦♦

திருநெல்லை இணைய வழி திங்களிதழை பெற விரும்புபவர்கள் 94433 37011 என்ற எண்ணிற்கு வாட்சப்-பில் தொடர்பு கொள்ளவும்.

♦♦♦♦♦

இணைய வழி தேவார இன்னிசை வகுப்பில் கலந்து கொள்ள விரும்புபவர்கள் 94433 35312 என்ற எண்ணை வாட்சப்-பில் தொடர்பு கொள்ளவும்

திருநெல்லை இதழுக்கான ஆன்மிகப் படைப்புகள் வரவேற்கப்படுகிறன. திருநெல்லை (இணைய இதழ்), கோவிலூர் மடாலயம், கோவிலூர் என்ற முகவரிக்கு அஞ்சலிலோ அல்லது நேரிலோ தங்கள் ஆக்கங்களை அன்பர்கள் அளிக்கலாம்.

♦♦♦♦♦

திருநெல்லை இணைய வழி மாத நாளிதழ் பற்றி தங்களுடைய மேலான கருத்துக்களை வாட்சப் எண். 94433 37011 மற்றும் koviloormadalayam@gmail.com என்ற மின்னஞ்சலுக்கு அனுப்பவும்.